# முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் 34-வது முப்பெரும் விழா

**ராசிபுரம், பிப்.12:** ராசிபுரம் முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் 34-ம் ஆண்டு விழா, விளையாட்டுவிழா, விடுதி விழா என முப்பெரும் விழா பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. விழாவில் ஆங்கிலத் துறை முதுநிலை விரிவுரையாளர் பி.குணவதி வரவேற்றார்.

முத்தாயம்மாள் கல்வி அறக்கட்டளையின் பொருளாளர் ஆர்.பிரேம்குமார் தலைமை வகித்தார். பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் ஜி.விஜயகுமார், கல்லூரியின் செயல்பாடு குறித்து பேசினார். மேலும் ஆண்டறிக்கை வாசித்தார்.

இவ் விழாவில், முத்தாயம்மாள் கல்வி அறக்கட்டளையின் தாளாளர் ஆர். ராமசாமி, சக்தி ஆட்டோ காம்போனென்ட் நிறுவனத்தின் டெக்னிக்கல் பிரிவின் துணைத் தலைவர் கே.சக்கரையப்பன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு பேசினர். சிறப்பு விருந்தினர் கே.சக்கரையப்பன் பேசுகையில், பணியிடங்களில் தான் பெற்ற அனுபவங்களை முறையாகப் பின்பற்றியதால் உயர்ந்த நிலைக்கு வர முடிந்தது. ஒழுக்கத்துடன் கூடிய கல்வி, தொழிற்சாலைகளிலும் முக்கியத்துவம் பெறுகிறது. இதனால் ஒழுக்கத்துடன் கூடிய கல்விக்கு மாணவர்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றார்.




விழாவில் சிறந்த மாணவர்களுக்கு பரிசளிக்கும் சிறப்பு விருந்தினர் கே.சர்க்கரையப்பன்.

கடந்த ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதம் நடைபெற்ற வாரியத் தேர்வில் 700க்கு 700 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் சாதனை படைத்த 9 மாணவ, மாணவியருக்கு தங்க நாணயங்கள் மற்றும் சிறப்பு பரிசு, கேடயங்கள் வழங்கப்பட்டன.

மேலும், சிறப்பிடம் பெற்ற அனைத்துத் துறை மாணவ, மாணவியருக்கும், ஆசிரிய, ஆசிரியைகளுக்கும் கல்லூரித் தாளாளர் ஆர்.இராமசாமி, சிறப்பு விருந்தினர் கே.சக்கரையப்பன், பொருளாளர் ஆர். பிரேம்குமார் ஆகியோர் 41 கிராம் தங்க நாணயங்களையும், பரிசுகளையும் வழங்கினர். மாநில, மண்டல அளவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும் விழாவில் பாராட்டப்பட்டனர்.